★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆடி 28 ஜூல்கஂ 3 இதழ் 181

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 13—8—83

## பாதயாத்திரை தமிழக எல்லையைக் கடக்க

# அனுமதிக்கப்படமாட்டாது!

### மத்திய அரசு அதிகாரி புதுடில்லியில் அறிவிப்பு

சென்னை, ஆக. 12

''தமிழ்நாடு 'காமராஜ் காங்கிரஸ்' தலைவர் திரு. நெடுமாறன் தலைமையில் இலங்கை விவகாரம் தொடர்பாக மதுரையிலிருந்து ஆரம்பமாகிச் சென்று கொண்டிருக்கும் பாதயாத்திரை தமிழ்நாடு மாநில எல்லையைக் கடக்க அனுமதிக்கப்படமாட்டாது'' என்று புதுடில்லியிலுள்ள இந்தியமத்திய அரசின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'தியாகப்படை' என்று தம்மைக்கூறிக்கொள்ளும் 'காமராஜ் காங்கிரஸ்' தொண்டர்கள் தமது பாதயாத்திரையை இலங்கைவரை நீடிக்கப்போவதாக அறிவித்திருந்ததும், இலங்கை மண்ணில் அவர்கள் மிதித்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென்று இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தன எச்சரிக்கை விடுத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராவுடன் இலங்கை அரசின் விசேட பிரதிநிதி எச். டபிள்யூ. ஜயவர்த்தன இப்பாதயாத்திரை விடயம் பற்றி பிரஸ்தாபித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

திரு. எச். டபிள்யூ. ஜயவர்த்தன இந்தியப்பிரதமர் திருமதி

(5-ம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று பிற்பகல்

# தணிக்கை

## பாதிக்கப்பட்ட கைத்தொழில் நிலையங்களும், ஊழியரும்

(கொழும்பு)

சமீபத்தில் நடந்த கலவரத்தினால் கொழும்பில் பாதிக்கப்பட்ட கைத்தொழில்நிறுவனங்களும், அங்கு வேலை செய்த தொழிலாளர் எண்ணிக்கையும் வருமாறு:-

ஹைதராமணி லிமிட்டெட் - 225
சிலோன் நிட் ட்ரெண்ட்- 434
பி. எச். கிஷோர் - 50
சென்ட் அந்தனி ஹாட்வெயர் ஸ்டோர் - 800
சென்ட் அந்தனி எஞ்சினியர்ஸ் - 50
சிலோன் சிந்தெட்டிக்ஸ் டெக்ஸ்டைல் மில்ஸ் - 971
சென்ட் அந்தனிஸ் இன்டஸ்ரீஸ் - 1050
சென்ட் அந்தனிஸ் ஸ்டோர்ஸ் - 3
சென்ட் அந்தனிஸ் இஞ்ஜினியரிங் வேக்ஸ் -8
ஹைப்ரோஇன்டஸ்ட்ரீஸ்- 161
ஹைலெக் இன்டர் நெஷனல் -576

(6-ம் பக்கம் பார்க்க)

### செய்தித் தணிக்கை அமுல்

கடந்த மாதம் 20ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

(மானிப்பாய்)

## தணிக்கை

## மாங்குளத்தில் இராணுவ ஜீப்விபத்து; வீரர் ஒருவர்பலி!

### மூவர் படுகாயம்

(கொழும்பு)

மாங்குளத்தில் நேற்று முன்தினம் நிகழ்ந்த இராணுவ ஜீப் விபத்தொன்றில் இராணுவ வீரர் ஒருவர் பலியானார்.

மாங்குளம் - அநுராதபுரம் வீதியிலேயே இவ்விபத்துநடைபெற்றது.

இவ்விபத்தில் மூன்று இராணுவ சிப்பாய்கள் காயமடைந்தனர். அவர்கள் உடனடியாக அநுராதபுரம் அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

உடனடி சிகிச்சைகள் அவர்களுக்கு அங்கு வழங்கப்பட்டதையடுத்து அவர்கள் ஆபத்தான நிலையிலிருந்தும் தப்பிவிட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்விபத்துச் சம்பவம் தெற்கில் பெரும் வதந்தியொன்றை கிளப்பிவிட்டிருந்

(6-ம் பக்கம் பார்க்க)

## விஜயா ஸ்ருடியோவில் 60சிங்களதிரைப்பட சுருள்கள் சேதம்!

### அமைச்சர் அல்விஸ் தகவல்

(கொழும்பு)

'கொழும்பு விஜயா ஸ்ருடியோ சேதமாக்கப்பட்டதால் 60 சிங்களத்திரைப்படச் சுருள்கள் எரிக்கப்பட்டன. அல்லது காணாமல் போயுள்ளன' என்று ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அகலவத்த பாராளுமன்ற உறுப்

(6-ம் பக்கம் பார்க்க)

## பாக். சுதந்திர தினத்தில் சட்டமறுப்பு நடவடிக்கை!

### எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் கைது செய்யப்படுகின்றனர்

இஸ்லாமாபாத், ஆக.12

பாகிஸ்தானின் சுதந்திரதினமான இம்மாதம் 14-ம் திகதியன்று சட்டமறுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பாக்கிஸ்தான் எதிர்க்கட்சிகள் முடிவுசெய்துள்ளன.

இம்முடிவையடுத்து பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் பல எதிர்க்கட்சி அரசியல் வாதிகளைக் கைது செய்து வருகின்றனர். பஞ்சாப் பகுதியில் மட்டும் பத்து தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் சமூக விரோதிகள் என்று கருதப்படும் சுமார் ஆயிரம் பேரின் பெயர்ப்பட்டியலையும் பாக். அரசு தயாரித்துள்ளது. ராவல்பிண்டியில் பல சோதனைகள் நடத்தப்பட்டன. இச்சோதனைகளில் மூன்று பெண்கள் உட்பட ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களனைவருக்கும் இரண்டு மாதத் தடுப்புக்காவல் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

## வடபகுதி ரயில் சேவை அடுத்தவாரம் ஆரம்பம்

### அமைச்சர் தகவல்

(கொழும்பு)

வடபகுதிக்கான ரயில்சேவைகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம்.எச் முகமது தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், தலைமன்னார் என்பவற்றுக்கான தபால் ரயில்களும், பகல் ரயில்களும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், போதிய பெட்டிகள் இல்லாததால் 'யாழ்தேவி' மட்டும் சேவையில் ஈடுபடாது என்று தெரிவித்தார்.

இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும்இடையிலான கப்பல் சேவையும் அடுத்த திங்கட்கிழமையிலிருந்து சேவையில் ஈடுபடவுள்ளது.

மேற்படி விபரங்கள் நேற்று முன்தினம் அமைச்சர் நடத்திய செய்தியாளர்மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

### சொந்தப்பிணையில் செல்ல அனுமதி

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் சட்டமாஅதிபரின்

(6-ம் பக்கம் பார்க்க)

புதிய நவீன எலக்ரோனிக் யந்திரம் மூலம்

## போட்டோ பிரதிகளுக்கு

நியூவிக்ரேஸ்எலக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 23532. [8187]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சாவகச்சேரி பஸ்நிலையத்தில் இருந்து 200யார் தூரத்தில் சிவன்கோவில் வீதியில் மூன்றரைப்பரப்பு காணி சிறிய வீடு, கிணறு, மலசலகூடம் ஆகிய வசதியுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பொ. இந்திரராஜா சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி. 8153

சாவகச்சேரி பஸ்நிலையம், பாடசாலை புகையிரத நிலையம், ஆஸ்பத்திரிக்கு அண்மையில் 2½ பரப்பு காணி புதிய வீட்டுடன் விற்பனைக்குண்டு. மின்சார, தண்ணீர் வசதியுண்டு. ''பரம்ஸ்'' நியூமார்க்கட், சாவகச்சேரி, அல்லது ப.கனகரட்ணம், சிவன்கோவிலடி, சாவகச்சேரி. 8162

பண்டத்தரிப்புப் பெண்கள் பாடசாலை இந்துக் கல்லூரி, பட்டினசபை, சந்தை முதலியவற்றிற்கு மையமாக 4 பரப்பு வீடு கட்டுவதற்கு உகந்த காணி நன்னீர்க்கிணறுடன் விற்பனைக்குண்டு. திருமதி பாலசிங்கம், அரசடி வீதி. வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. 8169

யாழ்நகர் பஸ் நிலையத்திற்கு அருகாமையில் ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நேரில்வரவும். அ.குமாரசாமி, 39/10, மின்சார நிலையவீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 8170

## WANTED

Leading Mercantile Firm in Jaffna requires for immediate employment. A middie aged Book Keeper/Clerk capable of drafting Final Accounts. only those with atleast five years experience. apply in own handwriting Stating Salary expected to 484, Hospital Road, Jaffna. 8180

An energetic Field Canvassar for booking orders for popular brands of Office Equipments, Electric Tools, Agricultural Implements etc. Those possessing Motor Cycle preferred. Security and previous experience essential. Apply to 484. Hospital Road, Jaffna. 8181

## தேவை

நற்குணமுடைய அனுபவமுள்ள கார்ச் சாரதி தேவை. தொடர்பு: அ. சுப்பிரமணியம், சட்டத்தரணி, 6/2. மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம். 8179

மணமகள் தேவை. யாழ். இந்து வேளாள 35 வயதுடைய வெளிநாட்டில் உத்தியோகத்தராகக் கடமையாற்றுபவருக்கு இதே இனத்தைச் சேர்ந்த 28 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். முதற் கடிதத்திலேயே விபரங்களைத் தெரிவிக்கவும். கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 8160, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 8160

## தவறிவிட்டது

வவனியாவில் இருந்து 28-7-83 மினி பஸ்சில் 3-30 மணிக்கு யாழ்ப்பாணம் வரும் பொழுது கடை கணக்கு புத்தகங்கள் 3 தவறிவிட்டன. அதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வேலணை மேற்கு, திரு. கே. என். ஐயாத்துரை என்பவருக்கு தகவல் தரவும் அல்லது ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 8185

## வகுப்புகள்

13—08—83 முதல் எமது கல்வி நிறுவனத்தின் வகுப்புகள் யாவும் வழமை போல் நடைபெறும். Welding, Wiring, Motor Mechanism ஆகிய நெறிகளுக்கான ஒரு மாத, மூன்றுமாத வகுப்புகளுக்கு புதிதாக விண்ணப்பித்தோரும், விண்ணப்பிக்கவிரும்புவோரும் உடன் தொடர்பு கொள்க: குறைந்த கட்டணம் அறவிடப்படும். J.E.C., 33. பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 8178

## அறிவித்தல்

Bamber and Bruce Ltdஇல் வேலைபார்க்கும் சுகந்தி துரைரட்ணம் ரஞ்சினி ரட்ணசிங்கம்- நீராவியடி, கல்லூரி வீதி, 42/1 இலக்கத்தில் திருமதி அம்பலவாணரை விரைவில் சந்திக்கவும். தொலைபேசி: 23397 (பக்கத்து வீடு) (8175)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் சரவணமுத்து பொன்னுச்சாமி

தோற்றம்: 1-3-1901 உதிர்வு: 14-7-1983

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

பிள்ளைகள்

பொ. காங்கேயநாதன்,
(மின்சார அத்தியட்சகர், யாழ். மாநகரசபை)
பொ. சண்முகானந்தசிவம்
(உதவி மின் பொறியியலாளர், மட்டு. மாநகரசபை)
பொ. பத்மநாதன்.
பிரான்ஸ், சித்தன்கேணி. (8172)

## கருணாநிதி கோரிக்கை மீது
# தி.மு.க எம்.பி.க்கள் இருவரும் உண்ணாவிரதம் கைவிட்டனர்

(புதுடில்லி)

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களை ஆட்சேபித்து சாகும் வரை உண்ணாவிரதமிருந்து வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த இரண்டு லோகசபை (இந்திய பாராளுமன்ற) உறுப்பினர்கள் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளனர்.

இந்திய லோகசபை உறுப்பினர்களான திரு. ரி. கோபால்சாமி, திரு. என். கணேசன் ஆகியோர் கடந்த 8ம் திகதி முதல் உண்ணாவிரதமிருந்து வந்தனர்.

நேற்று முன்தினம் நான்காவது நாளாக உண்ணாவிரதமிருந்த இவர்கள் தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியின் வேண்டுகோளின் பேரில் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்..

கண்டனங்களைத் தெரிவிக்க வேறு வழிகள் இருப்பதால் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு திரு. கருணாநிதி கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த விபரம் நேற்று முன்தினம் இந்திய ராஜ்ய சபையிலும் தெரிவிக்கப்பட்டது. (கு)

## முக்கிய அறிவித்தல்
## மின்விநியோகம்

1983ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8-00 மணி தொடக்கம் பகல் 12-00 மணி வரை முக்கிய பராமரிப்பு வேலைகள் செய்யும்பொருட்டு அநுராதபுரம் - யாழ்ப்பாணம் 132 கே. வி. மின் மார்க்கம் துண்டிக்கப்படவிருப்பதால் கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், துணுக்காய், முல்லைத்தீவு, சுன்னாகம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வேலணை போன்ற இடங்கள் அடங்கிய கிளிநொச்சி, யாழ் பிரதேசங்களில் பெரும்பாலான பகுதிகள் மின்சார விநியோகம் தடைப்படும்என அறியத்தருகின்றேன்.

**மின் பொறியியலாளர்**
(யாழ். பிரதேச அலுவலகம்)
இலங்கை மின்சாரசபை
சுன்னாகம்.

(8161)

## அறிவித்தல்
## மின் தடை

இலங்கை மின்சாரசபையினரால் சில அத்தியாவசிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதால், 14—08—1983-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணிமுதல் மாலை 1-00 மணி வரையும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் மின் விநியோகம் பெறும் பாவனையாளர்களுக்கு மின்சாரம் தடைப்படும் என்பது முன்கூட்டியே இத்தால் அறிவிக்கப்படுகிறது.

சி. வி. கே. சிவஞானம்
ஆணையாளர்,
யாழ். மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சிமன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
11-08-1983. 8176

## பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

பின்வரும் பாடங்களுக்கான அடுத்த தவணை பயிற்சியும் போதனையும் 3-9-1983 (சனிக்கிழமை) ஆரம்பமாகின்றன

1. கம்பியூட்டர் புறோகிறமிங் (3 பிரிவுகள்) செய்முறைப் பயிற்சி உட்பட புதிய கம்பியூட்டரில் பயிற்சி அளிக்கப்படும்.
2. மோட்டோர் மெக்கானிசம்
3. மின்சாரப் பொறியியல் டிப்பிளோமா
4. வெல்டிங் மற்றும்
5. ஆங்கில வகுப்புகள்

விண்ணப்பங்கள் அலுவலக நேரங்களில் எமது நிறுவனத்தில் பெறப்படும் படிவங்களில் தயாரிக்கப்பட்டு 31-8-83 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவாளர், பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ், 59, சென். பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

பதிவாளர்

(8182)

## அந்தியேட்டி அழைப்பு

தோற்றம்: 5-5-1958 உதிர்வு: 30-6-83

திருமதி சாந்தினி தர்மகுலசிங்கம்
(ஓட்டுசுட்டான் லக்சுமி ரேடிங் சென்ரர் உரிமையாளரின் மனைவி)



அன்பு, பண்பு, அடக்கம், அழகு யாவும் ஒருங்கே அமையப் பெற்று எல்லார் உள்ளங்களையும் உன்வசமாக்கிக் கொண்ட அன்புத் தெய்வமே, உமது உடல் எம்மை விட்டுப் பிரிந்தபோதிலும் உயிரும் உள்ளமும் எமது மனதை விட்டு அகலாது. சாந்தி என்ற பெயருக்கு ஏற்றாற்போல உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

2-07-83 நடைபெற்ற அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தவர்கள் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்வதுடன்.

14-08-83 ஞாயிற்றுக்கிழமை
எமது இல்லத்தில் நடைபெறும்
**அந்தியேட்டிக்கிரியைகளிலும்**
கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**கணவன், தாயார், மாமன், உடன்பிறப்புகள்.**

''பழைய மாளிகை'',
கோப்பாய் வடக்கு, கோப்பாய், (8186)

WE PROUDLY ANNOUNCE OUR APPOINTMENT AS DISTRIBUTORS FOR THE NORTHERN PROVINCE FOR THE UNDERMENTIONED PRODUCTS IMPORTED BY MESSRS. METROPOLITAN AGENCIES LTD. COLOMBO.

Please contact us for your requirements of any type of Office Equipments or Consumables

'Canon'
Photocopiers and Calculators

'Citizen'
Cash registers

'Optima' & Silver Reed
English Typewriters

'Halda'
Tamil Typewriters

'Ryobi' & 'Superfax'
Duplicating Machines

'Oce' 214
Plan Printing Machines

'Fuji-Kiden'
Overhead Projectors

'Metse'
Steel Cabinets and Cupboards

All Machines carry One Year Guarantee.
Attractive discounts will be allowed to Traders.

CEYLON MERCHANTS LTD.
484, HOSPITAL ROAD, JAFFNA. — Phone: 22134

# "ஒருவரின் உயர்வில் கல்லூரிக்கும் பங்குண்டு"

## மெமோறியல் அதிபர் சுந்தரதாஸ்

(வண்ணார்பண்ணை)

''ஒரு மாணவன் நன்மதிப்பும், கௌரவமான பதவியும் பெறும்போது அந்த உயர்விலும், பெருமையிலும் அவர் கற்ற கல்லூரிக்கும்பங்குண்டு. இந்த நிலையில் மானிப்பாய் மெமோறியல் கல்லூரி திரு. வி. இராசதுரை, திரு. சி. தம்பிராசா ஆகியோர் கௌரவிக்கப்படுவதைக்கண்டு பெருமையடையாமல் இருக்க முடியாது''.

இவ்வாறு அண்மையில் சமாதான நீதிபதிகளாக நியமனம் பெற்ற இக்கல்லூரியின் பழைய மாணவர்களான யாழ். அரசினர் மார்புச் சிகிச்சை நிலைய ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் திரு. வி. இராசதுரை ஆசிரியர் திரு. சி. தம்பிராசா ஆகியோருக்குப் பழைய மாணவர் சங்கம் நடத்திய பாராட்டுவிழாவில், தலைமையுரை நிகழ்த்திய மேற்படி கல்லூரியின் அதிபர் திரு. எஸ். சுந்தரதாஸ் தெரிவித்தார்.

மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் நடந்த இவ்வைபவத்தில் அதிபர் திரு. சுந்தரதாஸ் மேலும்பேசுகையில், ஒரு மனிதனின் உயர்வையும், சிறப்பையும் கண்டு ஒரு தாய் மகிழ்வதுபோல ஒரு மாணவனது சிறப்பையும் உயர்வையும் மதிப்பையும் காணும்போது அக்கல்லூரியும் பெருமைப்பட இடமிருக்கிறது. இதை சகல மாணவர்களும் மனதில் வைத்து கல்லூரிக்கும் தமது பெற்றோருக்கும் சமூகத்திற்கும் பயனுள்ளவர்களாக வளரவேண்டும். என்றார்.

திரு இராசதுரை, திரு. சி. தம்பிராசா ஆகியோர் பழைய மாணவர்களாக இருந்தபோதும் இவர்கள் அன்றுமுதல் இன்றுவரை இக்கல்லூரியின் சகல முன்னேற்ற நடவடிக்கைகளிலும் மாணவர்களாகவும், ஆசிரியர்களாகவும் நின்று செயல்பட்டு வருவது அவர்களது சேவைத்திறனை வெளிபடுத்துகிறது'' என்றார்.

மற்றும்பலர் பாராட்டுரையாற்றினர். (வண். நி)

# திருட்டுக்கள் பலவிதம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் பல இடங்களிலும் பரவலாக நடைபெற்றுவரும் களவுகள், சிறுகொள்ளைகள் பற்றிய செய்திகள் கிடைத்து வருகின்றன.

பருத்தித்துறைப் பகுதியில் நடைபெற்றுவந்த களவுகள் பற்றி ஆ. தேவராசன் என்பவர் பின்வரும் தகவல்களை எழுதியுள்ளார்.

இங்கு அடிக்கடி களவுகள் நடந்துவருகின்றன. வாழைக்குலைகள், கோழிகள், கிணற்றுவாளிகள், கப்பிகள், வீடுகளில் இரவில் மறந்துபோய் வெளியில்விடப்படும் செப்புப் பானைகள் போன்றவை, மின்மோட்டோர்கள் களவுபோகின்றன. சுருங்கச் சொன்னால் எது அகப்பட்டாலும் களவாடப்படுகிறது.

இந்தக் களவுகளில் ஒரே ஆசாமி கையும் மெய்யுமாகப் பலரிடம் சிக்கிக்கொண்டார். அண்மையில் ஒரு வீட்டில் கண்ணுக்குக்கீழே முகத்தை கறுப்புத்துணியால் கட்டிக்கொண்டு ஒரு போலித் துப்பாக்கியுடன் ஊரடங்கு நேரத்தில் ஒருவீட்டில் இரவு 7-30 மணியளவில் சென்று நகைகளை எடுக்கும்படி மிரட்டினார். அயல் வீடுகளில் இருந்த இளைஞர்கள் செய்தி அறிந்து ஒன்றுகூடி விரட்டுவதற்காக சுற்றிவளைக்க முன்னமே ஓட்டம்பிடித்துத் தப்பிக்கொண்டார்.

இத்தனைக்கும் இவர் சாதாரண உடற்கட்டுஉள்ள 40 வயது மதிக்கத் தக்கவர். பகலில் ஒரு காந்தி-இரவில் ஒரு பக்காத்திருடன்.

அராலி வடக்கில் சமீபகாலமாக ஆயுதங்களுடன் சென்று தனித்திருக்கும் வீடுகளில் கொள்ளையடிக்கும் சம்பவங்கள் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

சிலதினங்களுக்கு முன் விவசாயி ஒருவரின் வீட்டில் இரவு நேரத்தில் புகுந்த 6பேர் கொண்ட கோஷ்டி பாளை சீவும்கத்திகளைக்காட்டி மிரட்டி அவர்களை கடுமையாக தாக்கி காயப்படுத்திவிட்டு வீட்டில் இருந்த நகைகள்மற்றும் பெறுமதியான பொருட்களை திருடிச்சென்றுள்ளனர். இவ்வாறு ஆறுபேர் சேர்ந்து திருட்டுக்களில் ஈடுபடுவது ஒருவழக்கமாகிவருகிறது.

சுழிபுரம் பகுதியில் இரவு நேரத்தில் வீடுகளில் கதவுகளைத்தட்டி அபயம் கேட்பதும் கதவுதிறக்கப்பட்டால் உள்ளே புகுந்து திருடுவதும் ஒரு வழக்கமாவும் இப்பொழுது குறைந்துவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

# சில்லாலை பஸ் பிரயாணிகள் கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாண பஸ் நிலையத்திலிருந்து சில்லாலைக்குச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 791 இலக்க பஸ்சேவை தற்போது பண்டத்தரிப்புச் சந்திவரை நடைபெறுவதால் சில்லாலைக் கிராம மக்கள் மிகுந்த சிரமம் அடைகின்றனர்.

சில்லாலை வரை முன்புபோல சேவையை நடத்துமாறு இப்பகுதிமக்கள் வடபிராந்திய போக்குவரத்து சபைத்தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில்வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# 'புதிதாக நிதி ஒதுக்கப்படவில்லை'

(நெடுந்தீவு)

நெடுந்தீவின் மூன்று கிராமோதய சபைகளுக்கும் தலா ரூபா 15 ஆயிரம் வீதம் ரூபா 45 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகப் பிரதேச சபை தெரிவித்துள்ளது. எனினும் தற்போது கிராமோதய சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதி, முன்னாள் கிழக்குக் கிராமோதய சபைத் தலைவரால் அப்பகுதியின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்டபணம் என்றும் அதையே தற்சமயம் மூன்று பகுதிகளுக்கும் பங்கீடு செய்துள்ளார்களெனவும் புதிதாக நிதி ஒதுக்கீடுகளைப் பிரதேசசபை செய்யக்கூடிய நிலையில் இல்லையெனவும் நெடுந்தீவு முன்னேற்றக்கழகம் கூறியுள்ளது.

நெடுந்தீவில் குழாய்நீர் விநியோகம் சீர்குலைந்திருப்பதாகவும் விநியோகக் குழாய்கள் பழுதடைந்து நீர் வீண் விரயமாகிக் கொண்டிருப்பதாகவும் அதனைச் சீரமைக்க இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் கழகத் தலைவர் திரு. நா. இலட்சுமணராசா தெரிவித்தார். (அ)

# ஓய்வு பெற்றார்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் மெமோறியல் கல்லூரி ஆசிரியர் திரு. சி. பூலோகராசா தமது 35 வருட ஆசிரிய சேவையின் பின்பு கடந்த மாதம் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, பொரளை றோ. க. வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் உட்பட மற்றும் பல பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. பூலோகராசா தொல்புரத்தைச்சேர்ந்தவராவர். சங்கானை ப. நோ. கூ, ச. தொல்புரம் கிளைச்செயலாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

# இன்றைய பலன்

ஆடி 28-ம் திகதி
சனிக்கிழமை
(13-8-83)

மேடம்: வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம், அவசரப் போக்கினால் ஆபத்துக்கள் விளையும், சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டக்கூடும்.

இடபம்: ஒளிமயமான எதிர்காலத்துக்கான அறிகுறிகள் தென்படும், புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும், மனதில் உற்சாகம் பிறக்கும்.

மிதுனம்: பிள்ளைகளினால் பெருமைக்கு இடமுண்டு, விளையாட்டுத் துறையில் முதலிடத்தைப் பெறுவீர்கள், வணிகர்கள் வியாபாரத்தில் முன்னேற்றமடைவார்கள்.

கடகம்: மெத்தவும்பொருள் சேரும், மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிட்டும், தித்திப்பான செய்தியும்தேனான வாழ்வும் கிட்டும், பரோபகார சிந்தையும் மேலிடும்.

சிங்கம்: பலவித சிந்தனைகளினால் தாக்கப்படுவீர்கள், உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம், திரைமறைவில் மோசடி நடக்கும், நம்பிக்கையின் மூலம் பணம் விரயமாகும்.

கன்னி: நாளெல்லாம் அலைச்சலைக் கொடுக்கும். பெண் சகோதரத்தினால் மனக்கவலை உருவாகும், இக்காலம் பிற ஊண் அருந்தக் கூடாது, பிறரையும் நம்பக்கூடாது.

துலாம்: பிறருக்கு உதவி செய்வதில் முன்நிற்பீர் பிரிந்தவர் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் பிரமச்சாரி வாழ்க்கையில் பெரும் மதிப்பு உயரும்.

விருச்சிகம்: பேராசை மூலம் குறுக்குவழியை நாடுவீர் இதனால் விபரீதங்கள் விளையக்கூடும் மறைமுக எதிர்ப்புக்கள் தோன்றும் எதையும் சமாளிக்கும் மனத்திடம் வேண்டும்.

தனு: தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள். சுற்றுடலில் மதிப்பு உயரும் புண்ணியஸ்தலம் ஒன்றிற்கு யாத்திரை மேற்கொள்ளப்படலாம்.

மகரம்: கூட்டுவியாபாரத்தில் முன்னேற்றமுண்டு. கடற்றொழிலாளருக்கு லாபம் கிடைக்கும் வாய்ப்பு உண்டு. பிரச்னைகள் இன்று நல்ல முடிவை ஏற்படுத்தும்.

கும்பம்: துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். அதிக பேச்சைத் தவிர்த்துக்கொள்ளவும். அரசியல்வாதிகள் அதிக கவனம்செலுத்தவும்.

மீனம்: இன்பம் உங்களைத் தாலாட்டும், உறவு முறைகளினால் மகிழ்ச்சி நிலவும், எதிர்பார்த்த கடிதம் இன்றுகிடைக்கும்.

சோதிடக்கலாநிதி
**திருமலை
க. வேலுப்பிள்ளை**

# "இறைவனைப் பிரார்த்திப்போம்"

(சுழிபுரம்)

''தெய்வ வழிபாடும் தியானமும்தான் எமக்கு ஏற்படும் இடர்கள் யாவற்றையும் தணிக்கக்கூடியதாகும். இன்று நாம் யார் மேலும் குறை கூறாது எமக்கும் மேலான இறைவனை வாழ்த்தி வணங்கி வாழ்வோம். அமைதி இன்பம் நிறைந்த வாழ்வை வேண்டி நாம் யாவரும் இறைவனைப் பிரார்த்திப்போம்''.

இவ்வாறு பண்ணாகம் சத்சங்க சாதனைவட்டம் நடத்திய கூட்டு வழிபாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய சமயப் பிரசாரகரும், உரையாசிரியருமான திரு. சோ. க. வேலாயுதர் கூறினார்.

ஆசிரியர் திரு. இ. தம்பிராசாவின் தலைமையில் வழிபாடு நடைபெற்றது. பெருந்தொகையானவர்கள் இக்கூட்டு வழிபாட்டில் கலந்துகொண்டனர். பண்டிதர் அ. ஆறுமுகம் வழிபாட்டை நடத்தினார்.

# வகுப்புகள் நிறுத்தம்

(வண்ணார்பண்ணை)

இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவில் மண்டைதீவில் நடைபெற்று வந்த இலவச தேவார பண்ணிசைவகுப்புகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக மன்றச் செயலாளர் தெரிவித்தார்.

இவ்வகுப்பு நடத்தும் ஆசிரியர்களுக்கு தற்பொழுது ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடிகள் காரணமாகதற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. மீண்டும் வகுப்புகள் ஆரம்பிக்கும்போது பகிரங்க அறிவித்தல் தரப்படும் என்றுஇந்து இளைஞர் மன்றம் அறிவித்துள்ளது. (க)

# கிளிநொச்சியில் மீண்டும் தபால் விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கடந்த பல நாட்களின்பின் தபால் விநியோகம் கடந்த வியாழக்கிழமை முதல் நடைபெற்று வருகிறது.

யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் வெளிநாடுகளிலிருந்து பல நாட்களிற்கு முன்பு அனுப்பப்பட்ட தபால்கள் முதல்தடவையாக விநியோகிக்கப்பட்டது. அதன்பின்பு விநியோசிக்கப்படும் தபால்கள் பெரும்பாலும் உள்ளூர் தபால்களாகவே இருந்தன.

# அகதிகளுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

அகில உலக இந்துமகாசபையினர் கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் நின்று யாழ்ப்பாணம் வந்து சேரும் அகதிகளுக்கு தமது உதவியும் ஒத்துழைப்பும்சம்பந்தமாக யாழ். அரசாங்க அதிபருடன் பேச்சுவார்த்தை நடாத்தி [illegible] தமது நிலையை தெரியப்படுத்தியுள்ளனர்.

இதன் முதற்கட்டமாக இம்மகாசபையின் பெண் உறுப்பினர்கள் பத்துப்பேரும், ஆண்கள் பத்துப்பேருமாக மொத்தம் இருபது உறுப்பினர்கள் தினமும் அகதிகளுக்கு உதவ அனுப்பப்படுவர். காங்கேசன்துறை முகாம் உட்பட ஏனைய அகதிகள் வந்துசேரும் இடங்களிலும் இவர்கள் தொண்டில் ஈடுபடுவர் என இச் சபையின் தலைவர் தெரிவித்தார்.


**யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி**

வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சிட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு
நம்பிக்கையான விமான சிட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

**குறொஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.**

**05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.**

ஹொலண்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலண்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA)

போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)

**கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்**

தற்பொழுது விசேட சேவையாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான விமானப் பிரயாண ஒழுங்கு யாவற்றுக்கும் உடன் விரையுங்கள்!

**CROSS TRAVEL SERVICES (PVT)LTD.**

Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair

Stage II Modern Market Ist Floor
BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

## வசதிக்கேற்ப வாங்குவதற்கு பெயார் பிராண்ட்

பெயார் பிரான்ட் ஆடை நீக்காத பால் மா பக்கெட்டுகள்
ஒவ்வொரு குடும்பத்தின் தேவைக்காகவும்.... இரண்டு அளவுகளில் வருகின்றன.
400 கிராம் சிக்கனப் பக்கெட்டின் விலை ரூ. 22.40
சிறு பக்கெட்டின் விலை ரூ. 15.50

# பெயார் பிராண்ட் நீர் மட்டுமே நீக்கப்பட்ட சுத்தமான பசுப்பால்

### ஆலோசனைகள்



ஒரு கிளாஸ் சுத்தமான நீரில் 3 மேசைக் கரண்டி பெயார் பிரான்ட் பால் மாவைக் கரையுங்கள்.

ஆரோக்கியமும் அற்புத சுவையும் தரும் ஒரு கிளாஸ் பசுப்பால் உங்கள் கைகளில் தவழும். பெயார் பிரான்ட் பால் மா புத்தம் புதிய பசுப்பாலில் இருந்து மிக உயர்ந்த தராதரங்களுக் கேற்பப் பெறப்படும் ஒப்பற்ற பாலுணவாகும்.

### நெஸ்லே தயாரிப்புகளின் விநியோகஸ்தர்கள்

பெயார் பிரான்ட் பால் மா நெஸ்லே பதனிடும் நுட்பத் திறமையைத் தயாரிக்கப் பட்டு இலங்கையில் நெஸ்லே உற்பத்திகளின் விநியோகஸ்தர்களான சிலோன் நியூட்ரிஷனல் ஃபூட்ஸ் நிறுவனத்தினல் சந்தைப் படுத்தப்படுகின்றது என்பதை நீங்கள் அறிவீர்களா?

### பரிபூரண பாதுகாப்பு

பெயார் பிரான்ட் பால் மா உறுதியான அலுமினியம் காகிதப் பையில் அடைக்கப் பட்டு கடின அட்டைப் பெட்டியில் பொதி செய்யப் பட்டுள்ளது. ஆகவே, அதன் தூய்மையில் முழு நம்பிக்கை வைக்கலாம். சுத்தமான பாலுக்குப் பூரண உத்தரவாதம்.

### விட்டமின்களும் பால் புரதமும்

வளரும் பிள்ளைகளுக்கு அத்தியாவசியமான விட்டமின்களும் புரதச் சத்துகளும் நிறைந்த சுத்தமான பசுப்பாலில் இருந்தே பெயார் பிரான்ட் பெறப் படுவதால் குடும்பத்திலுள்ள அனைவருக்கும் அது அற்புத பானமாகும்.

## தேடுங்கள் கேளுங்கள் வாங்கிப் பருகுங்கள் பெயார் பிராண்ட்

## குடும்பப் பெண்கள் பெயார் பிராண்ட் பாலையே தெரிவு செய்யக் காரணம் என்ன?





சிறிசு: 250 கிராம் சிறு பக்கெட்டின் விலை ரூ. 15.50

பெரிசு: 400 கிராம் சிக்கனப் பக்கெட்டின் விலை ரூ.22.40

### இன்சுவை, பக்குவமான பொதி, நியாயமான விலை

"எனது அன்புக் குழந்தைகளுக்கு பக்குவமாகப் பொதிசெய்யப்பட்ட சத்து மிக்க, சுத்தமான பாலையே தெரிவு செய்கிறேன். சிக்கன வாழ்க்கையிலும் எனக்கு அக்கறை. ஆகவே, நான் எந்நாளும் பெயார் பிரான்டையே நாடுவதில் வியப்பில்லை. இன்சுவை நிறைந்த பெயார் பிரான்ட் பாலை எனது பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் பருகுகின்றார்கள். இதைவிட ஒரு தாய்க்கு வேறென்ன வேண்டும்?"



### கொடுக்கும் பணத்திற்குக் கைமேல் பலன்

"தரமான உணவுப்-பொருட்களின் தயாரிப்புக்கு உலகெங்கும் புகழ்பெற்ற ஒரு நிறுவனத்திடம் இருந்து பெயார் பிரான்ட் வருவதால் எனது அன்புச் செல்வங்களுக்கு எவ்வித தயக்கமும் இன்றி அதனைக் கொடுக்கிறேன். அது பக்குவமாக பொதி செய்யப்பட்டுள்ளது.



தரத்தில் ஒப்பற்றது. விலையும் நியாயமானது. பெயார் பிரான்ட் உண்மையிலேயே நாம் கொடுக்கும் பணத்திற்கு முழுப் பெறுமதியையும் தருகிறது.

### சிறு பக்கெட்... சிறு குடும்பங்களுக்கு உகந்தது



"எனது குடும்பத்தில் இரண்டு பேர்தான், எம் போன்றோர்க்கு சிறிய பெயார் பிரான்ட் பக்கெட் முற்றிலும் உகந்தது. சிக்கனமாகச் செலவு செய்ய அது எமக்கு உதவுகிறது.



### சிறுவர் பகுதி

ஒவ்வொரு இலக்கக் கட்டத்திற்கும் ஒவ்வொரு நிறமாக வர்ணந் தீட்டுவதன் பெயார் பிரான்ட் கரடியின் உருவத்தைப் பெறுவீர் கள்.



Grant K & E 4952

**றீகல்**
10-30, 2-00, 4-30
**GIRL FROM INDIA**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
காலை 10-30
விஜயன் - சத்தியகலா
**தனி மரம்**

**லிடோ** (யாழ். நகர்)
காலை 10-30
ரஜனிகாந்த்
**முரட்டுக் காளை**

**சாந்தி** யாழ். நகர்
காலை 10-30, 2-30
சிவாஜி — லட்சுமி
**தியாகம்**
(ஈஸ்ட்மென் கலர்)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
காலை 10-30
பிரதாப்— சோபா
**மூடுபனி**

**மனோகரா**
(யாழ்நகர்)
தினசரி மு. ப. 10-30
பி. ப. 2-00
ரஜனிகாந்த்-ஸ்ரீவித்யா
**பொல்லாதவன்**

**ஹரன்** (யாழ். நகர்)
காலை 10-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் **துணை**
(கலர்)

**ராஜா** (யாழ்நகர்)
10-30, 1-30
பாக்கியராஜ்—அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
**அந்த 7 நாட்கள்**
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
விஜயகுமார், ஜெய்கணேஷ், லதா, நாகேஷ், சுபாஷினி
**அழகே உன்னை ஆராதிக்கிறேன்**
(புத்தம் புதிய வண்ணப் பிரதி)

**ராணி** (யாழ். நகர்)
10-30, 2-30
கமலஹாசன் - அம்பிகா
**சகலகலா வல்லவன்**



## படமாளிகைகளுக்கு அறிவித்தல்

தற்போதைய போக்குவரத்து நிலைமையை திரைப்பட கூட்டுத்தாபன பொது முகாமையாளருக்கு அறிவித்து, அவரிடமிருந்து கீழ்வரும் அநுமதியைப் பெற்றுக்கொண்டேன்.

தற்போது படமாளிகைகளில் உள்ள படங்களை வேறு படமாளிகைகளுக்கு மாற்றம் செய்து திரையிட அனுமதி பெற்றுள்ளேன். ஆகவே உங்களிடமுள்ள திரைப்படங்களை மாற்றம்செய்து, இம்மாற்றங்களின் விபரங்களை திரைப்பட கூட்டுத்தாபனத்துக்கும், எங்கள் சங்கத்துக்கும் அறிவிக்கவும்.

நன்றி

திரு. றெபின் தம்பு
தலைவர்
ஐக்கிய திரைப்பட விநியோகிஸ்தர்கள்சங்கம்
யாழ்ப்பாணம்-வவுனியா-மன்னார்-முல்லைத்தீவு.

(8183)



## கோட்டு விற்பனவு விளம்பரம்
### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம் ஈடு 1374

1. ஆறுமுகம் ஜெயரத்தினம்
2. பெண் கலா ரஞ்சினி. ரெம்பிள் றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

வழக்காளிகள்

எதிராக

1. தம்பு இளையதம்பி
2. பெண் கனகம்மா
3. செல்லையா சிவரத்தினம்
4. பெண் பவானி கோண்டாவில்.

எதிராளிகள்

ஈடு 1374ம் இலக்க வழக்கில் எனக்கு கொடுக்கப்பட்ட கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டு காணியை 1983ம் ஆண்டு ஆவணி மாதம் 31ம் திகதி முற்பகல் 10-30 மணிக்கு அந்த காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 8800/-ம் மேலும் ரூபாய் 5000/-க்கு 3-4-80 துவக்கம் 9-4-81 வரைக்கு வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 24 வீத வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டு செலவு ரூபாய் 1540-94 சதமும் அறவிடப்படும்.

### குறித்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக்ற், யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்றுகோண்டாவில் இறை:- ''ஒதியன் சீமா'' நிலப்பரப்பு- 3. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் செ. இரத்தினசிங்கம் 14-10-76ல் அளந்து விபரித்த 414ம் இலக்க படத்தின் படி நில. பர. 3. குளி 4. செய்பயிர், வான்பயிர், வீடும், இதற்கு எல்லை கிழக்கு குளங்கரை ஒழுங்கை. வடக்கு முருகேசு கனகசிங்கத்தின் ஆதனம். மேற்கு சரவணமுத்து கைம்பெண் அன்னம்மாவின் ஆதனம். தெற்கு ஒழுங்கை. இதடங்கலும் மேற்கெல்லைக்காணிக்குள் இருக்கும் கிணற்றில் பங்கும், வழி வாய்காற் பாவிப்புரித்தும்.

ப. நா. தர்மலிங்கம்
கொமிஷசனரும், விலைமதிப்பாளரும்.

126. வாசிகசாலை றோட்டு,
3ம் கட்டை கல்வியன் காடு,
யாழ்ப்பாணம். 11-8-83

8171


## யாழ். பல்கலைக்கழக
# மருத்துவபீட (ஜூலை 83) பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)
(நேற்றைய தொடர்ச்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவபீடத்தின் மூன்றாவது ஆண்டு (ஜூலை 1983) பகுதி I (மீள்) பரீட்சை முடிவுகள் வருமாறு:—

**சித்தி**

எம். ஜே. எம். தாருக், பி. எம், ஈஸ்வரராஜ், எஸ். ஆனந்தசிவம், செல்வி எஸ். அருந்தவநாதன், ஜே. ஜி. ஈப்பன், செல்வி சி. பாத்திமா றேஸ், செல்வி ஜே. சி. சி. பெர்னாண்டஸ், பி. கனகபாகு, செல்வி சி. கணபதிப்பிள்ளை, கே. இ. கருணாகரன், எஸ். மனோக்ரன், செல்வி பி. பாவானிதேவி, எஸ். ரவி ராஜ், செல்வி கே. சத்திய பாலன், எஸ். செல்வரட்ணம், செல்வி கே. சண்முகம், கே. சிவசுதன், ஜி. சுபகுமார், செல்வி ரி. சுப்பிரமணியம், எஸ். தியாகர்ராசா, வி. துரைராஜன், செல்வி கே. துரைசாமி, செல்வி எம். இ. அந்தோனிப்பிள்ளை, செல்வி ரி. பஞ்சசீலா, செல்வி ஜே. இராசையா, செல்வி கே. சோமசுந்தரம், செல்வி ஆர். சண்முகராஜா, செல்வி. வை. சுந்தரம்பிள்ளை, எஸ். சூரிய பாலன், கே. இளங்கோ.

**நூனசித்தி**

ஆர். ஜி. மரியதாஸ், செல்வி எஸ். மோகனவதி, கே. பரமானந்தம், கே. இரத்தின சிங்கம், செல்வி பி. சத்திய வதி, ஏ. தில்லையம்பலம், வி. திவாகர், கே. வசீகரன், செல்வி எல். எம். அருளானந்தம், செல்வி கே. சபாநாயகர், ரி, சுவர்க்க லோகநாதன், இ. தவராஜா.

**மீள் நூனசித்தி**

எம். ஐ. என். கிறிஸ்தோபர், ஏ. டலெஸ் டெலிமா, ஏ. கிருஷ்ணராஜன். ஏ. எல். சாஜஹான், செல்வி. கே. சிவகணேசமுருகமூர்த்தி, செல்வி ஏ. துரைசிங்கம், கே. விவேகானந்தன், செல்வி ஜி. எம். மயில்வாகனம்.

**3-வது ஆண்டு மருந்துவபீடம் - பகுதி 11 (மீளவும்) 1983**

**சித்தி**

பி. ஏ. எம். ஈஸ்வரராஜா, கே. சிவகுமார், கே. சுகுமார், எஸ். ஆனந்தசிவம், பி. அனுரா, எம். ஐ. என். கிறிஸ்தோபர், ஏ. டலஸ் டெலிமா, ஜே. ஜி. ஈப்பன், கே. ஈ. கருணாகரன், செல்வி பி. பவானி தேவி, சி. சபாநாயகம், செல்வி கே. சிவகணேச முருகமூர்த்தி, செல்வி ரி. சுப்பிரமணியம், எஸ். தியாகராஜ, செல்வி கே. துரைசாமி, ஏ. யோகானந்த மூர்த்தி, செல்வி எம். ஈ. அந்தோனிப்பிள்ளை, செல்வி ரி. பஞ்சசீலா, செல்வி கே. சபா நாயகர், செல்வி சோமசுந்தரம்.

**நூனசித்தி**

கே. பரமானந்தம், கே. ரத்தினசிங்கம், ஏ. எல். ஷாஜஹான், ஏ. தில்லையம்பலம், வி. துரைராஜன், கே. வசீகரன், கே. விவேகானந்தன், செல்வி ஏ. ஈ. கிறீனி, கே. இளங்கோ,

**மீள் நூனசித்தி**

செல்வி சி. பாத்திமாறேஸ், செல்வி பி. சத்தியாவதி செல்வரத்தினம், செல்வி ஆர். சண்முகராசா, எஸ். சூரியபாலன், ஈ. தவராஜா, செல்வி ஏ. துரைசிங்கம், செல்வி ஜி. என். மயில்வாகனம்.

**3-ம் ஆண்டுப் பரீட்சை (மீளவும்):**

**சித்தி**

எம். ஜே. எம். தாருக், பீ. எம்: ஈஸ்வராஜ், கே. சிவகுமார், கே. சுகுமார், எஸ். ஆனந்தசிவம், பி. அனுரா, செல்வி எஸ். அருந்தவநாதன், ஜே. ஜி. ஈப்பன், பீ. கனகபாகு, செல்வி. சி. கணபதிப்பிள்ளை, கே. ஈ. கருணாகரன், எஸ். மனோகரன், செல்வி பி. பவானி தேவி, எஸ். ரவிராஜ், செல்வி கே. சத்தியபாலன், சி. செப நாயகம், செல்வி கே. சண்முகம், கே. சிவசுதன், ஜி. சுப குமார், செல்வி ரி. சுப்பிர மணியம் எஸ். தியாகராஜா, செல்வி கே. துரைசாமி, ஏ. யோகனந்தமூர்த்தி, செல்வி எம். ஈ. அந்தோனிப்பிள்ளை, செல்வி ரி. பஞ்சசீலா, செல்வி ஜே. இராசையா, செல்வி கே. சோமசுந்தரம்.

## பாதயாத்திரை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

காந்தியுடனும் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலருடனுமான தமது பேச்சுக்களை முடித்த பின்னர் தாயகம். திரும்பியுள்ளார். இவர் தமது பேச்சுக்கள் மிகுந்த பலனளித்தன என்று குறிப்பிட்டார். (கி)

## திருப்பணி

(வேலணை)

வேலணை பெருங்குளம் ஆலடியில் எழுந்தருளியுள்ள ஞான வைரவர் ஆலயம் கடந்த முப்பது வருடங்களாக அரைகுறையாகக் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுடன் காணப்படுகின்றது.


## விசேட அறிவித்தல்

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்டில் இம்மாதம் 1-ம் திகதி ஆரம்பமாகவிருந்த புதிய வகுப்புகள் பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகின்றன.

★ . ஆசிரியர் திரு. T. N. பஞ்சாட்சரம் அவர்களின்

INTENSIVE
**SPOKEN ENGLISH COURSE**
ஆரம்பம்:- 20 - 8 - 83

★ விஞ்ஞானம், கணிதம், மனையியல், விவசாயம்
ஆசிரியர்களுக்கான போட்டிப்பரீட்சைக்குரிய
**விசேட வகுப்புகள்**
ஆரம்பம்:- 15 - 8 - 83

விபரங்களுக்கு:- நேரில் / தபாலில்

**ASTAN INSTITUTE**
166/1, HOSPITAL ROAD JAFFNA






வியாபாரிகளுக்கு கவர்ச்சியான கழிவு கொடுக்கப்படும்

| | | பெரியசைஸ் | நடுத்தரசைஸ் | சிறியசைஸ் |
|---|---|---|---|---|
| சுப்பர் | — | 14.90 | 12.90 | 10.90 |
| டிலக்ஸ் | — | 16.90 | 14.90 | 12 90 |
| றோயல் | — | 22.90 | 20.90 | 17.90 |

**ஜெனித் டிரேட்ஸ் லிமிட்டெட்**
245, 1-3 காலிவீதி கொழும்பு-4.

### மணிவாக்கு

உள்ளத்தின் அழுக்கைப் போக்கிக் கொள்வதற்காக புராணங்களும் நம்முடைய புனித நதிகளும் உயிர் கொண்டு ஓடுகின்றன. அவற்றில் குளிப்போமாக!

—ராஜாஜி

# நமது நோக்கு

## சிதம்பரம் வந்தது

எங்கள் முந்தநாள் பத்திரிகையில் 'சிதம்பரம் வந்தது' என்ற தலையங்கத்தில் வெளிவந்த செய்தி வாசகர்கள் உள்ளத்தில் என்னென்ன உணர்வுகளை எழுப்பியது எமக்கு எட்டாத விடயம்.

அழகான ஆகுபெயரில் சிதம்பரம் கையாளப்பட்டது செய்தி ஆசிரியரின் கற்பனைத் திறனை எடுத்துக் காட்டுகிறது.

பாரத தேசத்தின் அலங்காரக்கப்பலின் பெயர் 'சிதம்பரம்'; தாய்நாட்டிலிருந்து சேய்நாட்டுக்குவந்த நோக்கம் வாசகர்கள் அறிந்ததே! அதில் பயணஞ் செய்து யாழ்ப்பாணம் வந்தடைந்த 1200 அகதிகள் கொடுத்துவைத்தவர்களென்று பேசப்படுகிறது; கோயிற் பூசையும் பிரசாதமும் பெருமையாகப் பேசப்படுகின்றன. 'கோயில்' என்றால் சிதம்பரம் அதுநிற்க நாம் ஆகுபெயரின் அழகை விவரிப்பதில் இன்பம் காண்பது நியாயமாகும். தில்லையில் ஆடுகின்ற நடராஜன் தான் எங்களையும் ஆட்டுவிக்கிறான்.

'சிதம்பரம் போகாமலிருப்பேனோ ஜென்மத்தை வீணாகக் கழிப்பேனோ' என்ற நந்தன் பாட்டு நாடக மேடையில் நன்கு பாடப்பட்ட காலத்தில், அப்பாட்டையே பாடிக் கொண்டு சிதம்பர யாத்திரையில் அள்ளுப்பட்ட யாழ்ப்பாண மக்கள் எண்ணற்றவர்; அது அந்தக் காலம்; இன்று ரூபவாகினியில் பார்ப்பது போதுமளவிற்கு வந்து விட்டது.

அன்றைய மரபு அதற்கு முன் வாழ்ந்த சந்ததியார் சிதம்பர நடராஜரில் கொண்ட அளவற்ற அபிமானத்தால் அப்பெருமானுக்கே யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல இடங்களில் தர்மசாதனஞ்செய்த சொத்துக்களால் வளர்ந்து வந்தது.

எவ்வாறு சோழமன்னர்கள் குறிப்பாக குலோத்துங்க மன்னன் விலை மதிக்க முடியாத அறக்கட்டளைகளை தில்லைக்கூத்தனுக்கு ஏற்படுத்தினர்களோ அவ்வாறு விரலுக்கேற்ற வீக்கமென்பதுபோல். யாழ்ப்பாணச் சான்றோர் ஆடலரசனைத் தம்மரசனாகக் கொண்டு கொடைகளை அள்ளி வழங்கினர்.

தில்லைத் தலத்தையே மையமாகக் கொண்டு சைவ சமயப் பணியை மிக விரிந்த அடிப்படையில் நாவலர் பெருமான் ஆற்றினரென்றால் சிதம்பரம் இந்நாட்டில் வாழும் தமிழர்களின் தலைமைத்தலமென்ற உணர்வு கப்பலில் வந்து கரைசேர்ந்தவர்களுக்குத் தேற்றமும் பெருமையுமளிக்க வல்லது.

அகதிகளுக்கு இவ்வித சீவகதி கிடைத்த கதை நடராஜனின் கூத்தில் ஒன்றெனலாம்.

'ஆர்த்த பிறவித் துயர்கெட நாமார்த்தாடும் தீர்த்தன், நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுகின்றான்'; இத்தீ அழிக்குந் தீயென்றாலும் அது பாவங்களையே அழிக்கின்றது; எனவே நாங்கள் பழகிவரும்தீயைப் போல் தீமைவிளைக்காது; பிறவித்துயர்கெடக் கூத்தாடும் பெருமானுக்கு எங்கள் துயர் எந்த மட்டு! தேற்றமடைவோமாக.

எனவே நாங்கள் சிதம்பரம் போகும் வசதி குன்றியிருக்கும் வேளையில் சிதம்பரம் எங்களைத் தேடிவந்ததும் முகாம்களில் அடைபட்டுக்கிடந்த ஆன்மாக்களுக்கு விடுதலை அளித்ததோடு சுவையான உபசாரமும் பிரசாதமும் வழங்கியதும் இருள் கடிந்து அருள்புரியும் தன்மையின் அறிகுறியென்றுணர்க.

## ஞானத்திருநிறை நல்லூர்க் குகவேள்

அமைந்து கூவும் அழகிய சேவலங் கொடியோனே
அகங்கு லாவும் அருளெழு வேலமர் அழகோனே
குமைந்து கூடுங் கொடுமனக் கூடழி குமரோனே
குகன்ன ளுமுன் குறைநிறை வாக்கிடுங் குரவோனே
சமைந்து தீருஞ் சகமுள சார்பவை களைவோனே
தவத்தர் காணுந் தகவுடை யானருள் தகவோனே
திமைந்து யாகத் திறமுறு வான்மழைத் திறலோனே
திகழ்ந்த ஞானத் திருநிறை நல்லூர்க் குகவேளே.

— ச. தங்கமாமயிலோன்

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983ம்ஆண்டு ஆகஸ்ட்மாதம்13-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389—24126.

### வருடாந்த உற்சவம்

(நெடுந்தீவு)

சண்டிலிப்பாய் மாகயம்பதி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் கோவிலின் வருடாந்த உற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றவைபத்துடன் ஆரம்பமாகி 22-ம் திகதி இரதோற்சவம் இடம்பெறும் 23-ம் திகதி தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும்.

### சொந்தப் பிணையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுத்துமூல அனுமதியுடனேயே பிணையில் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் இத்தகவல் வெளியிடப்பட்ள்ளது.

பிணை செலுத்தத் தவறியதால் தொடர்ந்து சிறைச்சாலைகளில் உள்ளவர்களைச் சொந்தப்பிணையில் செல்ல அனுமதிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள இடவசதியைக் குறைப்பதற்காக இவ்வேற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

சிறைச்சாலை ஆணையாளர் நீதிமன்றங்களின் மூலம் இவர்களைச் சொந்தப் பிணையில் செல்வதற்கு ஏற்பாடுகளைச் செய்வார்.

### மாங்குளத்தில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தது என்றும் அவ்வறிக்கையில் இராணுவ வீரர்கள் சிலர் மாங்குளத்தில் டிரக்கில் வந்து கொண்டிருந்தவேளை பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது என்றும் பரப்பப்பட்டபோதிலும் அரசாங்க வட்டாரம் இவ்வதந்தி பொய்யானதென மறுத்து வானொலி, தொலைக்காட்சிகள் மூலம் பிரசாரங்களை மேற்கொண்டது. (கி)

### பாதிக்கப்பட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| தில்லிஸ் பீச் ஹோட்டல் | - 50 |
| டாட்டா இண்டஸ்ரீஸ் | - 404 |
| செட்ரோ டெக்ஸ்டைல் மில் | - 72 |
| செரண்டிங் கார்மன்ஸ் | - 13 |
| ரீவ்ஸ் கார்மென்ஸ், | - 325 |
| இம்மோல் கார்மென்ட்ஸ் | - 300 |
| ஐ. ஸீ. எஸ். | - 200 |
| செம்வே பிரைவேட் லிமிட்டெட் | - 25 |
| மஹாராஜா தலைமையகம் | - 250 |
| மஹாராஜா பிரிண்டிங்ஸ் | - 25 |
| மஹாராஜா ரபர் ரிஷரெடிஸ் | - 200 |
| மஹாராஜா ஜோன் இன்டர்நெஷனல் | - 25 |
| கார்லி டேனியல் இரத்மலானை | - 25 |
| யுனைடெட் கார்மென்ட்ஸ் | 909 |
| பெரக் பெட்டரி இரத்மலானை | - 170 |
| பொறுபேக் | - 125 |
| சிலோன் பொலிதீன் இன்டக்ஸன் | - 30 |
| சிங்ஹா ஸ்பென்ஸர் | - 200 |
| ஹில்டொப் ஹொடேல் | - 26 |
| சிவராம் இன்டஸ்ரீஸ் | - 25 |
| ஜே. என். பி. இன்டஸ்ட்ரீஸ் தெஹிவளை | - 25 |
| ஜெனரல் மோட்டோர்ஸ் லிமிட்டெட் களனி | - 20 |
| மொடர்ன் கொன்ஸக்ஷனரி லிமிட்டெட் | - 85 |
| முருகன்ஸ் லிமிட்டெட் | - 434 |
| கிருஷ்ணா கோர்ப்பரேஷன் | - 79 |
| கிளிப் டெக்ரில் இன்டஸ்ட்ரீஸ் வத்தளை | - 350 |
| ஓரிசன் இன்டஸ்ட்ரீஸ் | - 75 |
| எஸ். எஸ். இன்டஸ்ரீஸ் | - 30 |
| சென்ட் அந்தனிஸ் வீவிங் சன் பிட்டிங் இன்டஸ்ரீஸ் | - 60 |
| ஜெனரல் இன்டஸ்ரீஸ் | - 353 |
| ஏ. ஏ. அன் சன்ஸ் | - 30 |
| சாந்தி ஐஸ்கிரீம் | - 145 |
| லக்ஷ்மி ஓயில் மில்ஸ் | - 75 |
| வலுகல டீ ஸ்டோர்ஸ் | - 25 |
| சென்ரல் கொமர்ஷல் ஓயில் மில் | - 125 |
| சன்வைட் சோப் | - 25 |
| ஆர். எம். வி. சன் லிமிட்டெட் | - 100 |
| மீனும்பிகா ஓயில் மில்ஸ் | - 50 |
| ஸ்டார் லைன் கம்பனி | - 15 |
| கோன்கீல் ஸ்டோர் | - 25 |
| மீட்ரோ போர்ம் மேக்கர்ஸ் | - 35 |
| ஹைதராமணி பிளைவுட் | - 15 |
| டாடா அன் கம்பனி | - 4 |
| இந்தோ சிலோன் லெதர் கம்பெனி | - 125 |

### விஜயா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பினர் திரு, மெரில்காரியவாசம் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் அல்விஸ் மேற்கண்ட விபரத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: 'உள்நாட்டுத் திரைப்படத் துறையில் ஆர்வம் கொண்ட கலைஞர்களான நீல் ரூபசிங்க, விஜய குமாரதுங்க, மாலினி பொன்சேகரா, சனத்குணதிலக்க, ரவீந்திர ரந்தெனிய உட்பட சிலர் விஜய ஸ்ரூடியோவிலிருந்தும் அப்புறப் படுத்தப்பட்டதிரைப்படங்கள் பலவற்றை மீட்டெடுத்துள்ளனர்.

''திரு. கே. குணரத்தினவுக்குச் சொந்தமான விஜயா ஸ்ரூடியோ சேதமாக்கப்பட்டதால் தயாரிப்பாளர்கள் பலர் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள். இவர்களுக்கு நிவாரணம் வழங்க புனர்நிர்மாண அதிகாரசபை ஆவன செய்யுமென எதிர்பார்க்கிறேன்.

சேதமாக்கப்பட்ட சொத்துக்களுடன் விஜயாஸ் ஸ்ரூடியோ'வும் அரச உடமையாக்கப்படும். இத்துடன் இதன் சேதங்களை மதிப்பிட்டு இங்கிருந்தும் காணமல் போனவற்றை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றார். (கி)

### வங்கி வேலைகள் பாதிப்பு

(மானிப்பாய்)

யாழ்ப்பாணத்தில் வங்கிக் கிளைகள் பலவற்றில் வழமை போல் வேலை நடைபெற்று வந்தாலும் சில வங்கிக் கிளைகளில் வேலைகள் சீராக நடைபெற முடியாத நிலை தோன்றியுள்ளதாக அறியப்படுகின்றது.

இக்கிளைகளில் கடமையாற்றி வந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வேலைக்குத் திரும்பாத காரணத்தினாலேயே இவ்விதம் இக்கிளைகளில் முழுமையான வேலைகள் நடத்தப்பட முடியாமலிருப்பதாகத் தெரியவருகின்றது.

## மரண அறிவித்தல்

### திருமதி வோல்ட்டன் கமலாவதி

கமலாவதி வோல்ட்டன் (Walton) 33, ஆசீர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி அரசு வோல்ட்டனின் அன்பு மனைவி கமலாவதி காலமானர். இவர் சுவேந்திரினியின் அன்பு தாயாரும். டாக்டர் J. P. மாணிக்க சிங்கத்தின் மாமியாரும், பிரபாஷ், ஷிவாந்தி ஆகியோரின் அருமை பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (13-8-83) சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து புனித பரியோவான் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். 8184

## மரண அறிவித்தல்

### நடராசா மாணிக்கவாசகர்

புங்குடுதீவு ஊரதீவு 7ம் வட்டாரத்தைச்சேர்ந்த

நடராசா காலஞ்சென்ற சுந்தரியினுடைய அன்பு மகனும் நாகம்மாவின் அன்புத் தம்பியும், ஜெகதீசன் (சீமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன் துறை) அன்பு மைத்துனரும், விஜிதா - திவாதரனின் அன்பு மாமனருமான மாணிக்கவாசகர் (25-7-83) அன்று சீதுவையில் அகால மரணமானர். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக் கொள்ளவும். 8174

## மரண அறிவித்தல்

### மா. சிவராஜா

### (டொக்யாட் லிமிட், கொழும்பு.)

கோப்பாய் தெற்கு நாவலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற மாரிமுத்து அவர்களின் இரண்டாவது புத்திரன் சிவராஜா (ஸ்ரோர் கீப்பர்) 25-7-83 அன்று கொழும்பில் அகாலமரணமானர். இவர் திருமதி மாரிமுத்து சிவகாமிப்பிள்ளையின் அருமை மகனும், அருந்தவமலர் (கட்டிடத் திணைக்களம், கொழும்பு) அவர்களின் கணவரும், சிவஜெனனியின் அன்புத் தந்தையும் காசிநாதர் (புகையிரத நிலையம், காங்கேசன்துறை), செல்வராஜா (நெல் ஆராய்ச்சி நிலையம், பரந்தன்), சிங்கராஜா (பிரான்ஸ்), நவரத்தினராசா (பொலிஸ், பருத்தித்துறை), குகதாசன் (இலங்கை வங்கி, பருத்தித்துறை), கனகராஜா (பிரான்ஸ்), பாலகிருஷ்ணராஜா (பிரான்ஸ்), செல்லம்மா, இரத்தினமலர், கோணேஸ்வரி, அகிலாண்டேஸ்வரி (அமெரிக்கா) மகிழ்மலர் ஆகியோரின் அருமைச் சகோதரரும், சின்னத்துரை, இராசரத்தினம் (கிளிநொச்சி), பரமானந்தம் (ஆசிரியர்) நவரத்தினம் (அமெரிக்கா) ஆகியோரின் மைத்துனருமாவார். இத்தவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

8177